Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. : OS.No.18/2017

Witness for Prosecution : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கணேசன் | Taluk | : |
| Father's / Husband Name | : கரியன் (எ) பெரியமுனியப்பன் | Calling | : |
| Village | : பெண்ரஹள்ளி | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 02.12.2025 administered by **MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, POCHAMPALLI**

துவக்க நேரம்– 03.21 PM

பி.வா.சா.1 ஆஜர். 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) 1940 ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரத்தில் சர்வே எண்.55/2ல் 95 சென்ட் நிலம் வாங்கியதாக குறிப்பிடுவதில் அதன் தற்போதைய உட்பிரிவு என்ன என்றால் தெரியாது, எந்த ஆண்டு, எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டது என்றால் தெரியாது. 1940–ம் ஆண்டு கிரையம் பெற்றது யார் என்றால் என் அப்பா பெரிய முனியப்பன் (எ) கரியன் மற்றும் சித்தப்பா சின்ன முனியப்பன் (எ) முனியப்பன் பெயரில் கிரையம் பெறப்பட்டது.

2) வாதியின் தகப்பனார் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தகப்பனானும் சேர்ந்து கிரையம் பெற்றதை எப்போது எவ்வளவு விஸ்தீரனம் கண்டு யாருக்கு பிரிக்கப்பட்டது என்றால் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டது யாருக்கு எவ்வளவு என்று தெரியாது. பெரிய முனியப்பன் (எ) கரியன் மற்றும் சித்தப்பா சின்ன முனியப்பன் (எ) முனியப்பன் ஆகியோருக்கு எவ்வளவு விஸ்தீரனம் பிரிக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 78 ஆண்டுகளுக்கு முன்பாக பாகம் பிரிக்கப்பட்டதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3) இவ்வழக்கில் வாதி எந்த சொத்திற்காக தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.55/2 சொத்திற்காக தாக்கல் செய்துள்ளார். அதன் உட்பிரிவுகள், விவரங்கள் தெரியுமா என்றால் இல்லை. 51/2 மற்றும் 55/2 ஆகிய இரண்டு சர்வே எண்களிலும் வாதியின் தகப்பனார் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் ஆகியோர் வீடு கட்டியதாக சொல்வது யார் யார், எந்த சர்வே எண்ணில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் தெரியாது. வாதியின் தகப்பனார் மற்றும் பிரதிவாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் எப்போது வீடு கட்டினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது, நான் பிறப்பதற்கு முன்பாக கட்டினார்கள். 1,2 பிரதிவாதிகளுக்கும், 3 வது பிரதிவாதி மணிக்கும் இடையே பேச்சுவார்த்தை உண்டா என்றால் 17 வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லை.

4) 1 முதல் 3 பிரதிதிவாதிகள் எந்த சர்வே எண்ணில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் தெரியாது. வாதியின் தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு 1981-ம் ஆண்டு அவருக்கு வந்த பாகத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். யார் கையொப்பம் செய்தார்கள், யாருடன் சென்றார்கள், எவ்வளவு விஸ்தீரனம் என்று தெரியுமா என்றால் தெரியாது. விற்பனை செய்யப்பட்ட சொத்து மாரியப்பன் பெயரில் பட்டா பெறப்பட்டதா என்றால் தெரியாது. எவ்வளவு விற்பனை செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்பது பொய். மாரியப்பன் 50 சென்ட் நிலத்தை கிரையம் பெற்று அது சர்வே எண். 55/2C1, 2C2, 2C3, மற்றும் 55/2G ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

5) வாதியின் தகப்பனார் வாய்மொழியாக தனக்கு வரப்பெற்ற 50 சென்ட் நிலத்தை 4 ம் பிரதிவாதி மாரியப்பனுக்கு விற்பனை செய்துவிட்டதால் சர்வே எண்.55/2 ல் வாதியின் தகப்பனாருக்கு வேறு நிலம் இல்லை என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி மணிக்கும் எனக்கும் உள்ள விரோதத்தின் காரணமாக வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாதனுடைய தந்தை பெயர் என்னவென்றால் தந்தை பெயர் சின்ன முனியப்பன் (எ) முனியப்பன், மாதன் Initial என்ன என்றால் M.மாதன். மாதன் மூர்த்தி என்பவருக்கு விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் மாதன் மூர்த்திக்கு எந்த சொத்தையும் விற்பனை செய்யவில்லை.

6) மாதன் மூர்த்திக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தில் 4ம் பிரதிவாதி மாரியப்பன் நிலத்திற்கு வடக்கு என்று கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மூர்த்தியின் அம்மாவுக்கு நாங்கள் நிலம் ஒதுக்கினோம். வாதியிடமிருந்து

தங்கராஜ் என்பவர் எந்த வருடம் எவ்வளவு விஸ்தீரனம் கிரையம் பெற்றார் என்றால் 1999ம் ஆண்டு 90 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றார், அதன் பின்னிட்டு நான் தங்கராஜ்க்கு விற்பனை செய்யப்பட்ட முழு இடத்தையும் வாங்கிவிட்டேன். வாதி M.மாதன் தங்கராஜ்க்கு விற்பனை செய்யப்பட்ட பின்பு சர்வே எண்.55/2ல் வாதி மாதனுக்கு நிலம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் தந்தை கரியன் (எ) முனியப்பன் என்பவருக்கு வந்த பாகத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் பிரித்துக்கொண்டதில் 3வது பிரதிவாதி மணிக்கு 55/2D ல் 0.08.0 இடம் உள்ளது என்றால் இல்லை, மேற்படி நிலம் யாருடையது என்றால் என்னுடைய இடம் வாய்மொழியாக பாகம்பிரிக்கப்பட்டது. யாருடைய பெயரில் சிட்டா உள்ளது என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது.

7) 55/2D ல் மணி வீடுகட்டியுள்ளார் என்றால் இல்லை, மேற்படி சர்வே எண்ணில் என் தந்தையார் கட்டிய ஓட்டு வீட்டில் அவர் குடியிருக்கிறார். எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார் என்றால் 30 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார். யாருடைய பெயரில் மின் இணைப்பு மற்றும் வரிரசீது கட்டி வருகிறார் என்றால் மணி பெயரில் கட்டி வருகிறார். மேற்படி 55/2D ல் மணி என் தந்தை கட்டிய வீட்டில் வசித்து வருகிறார் என்றும், மின்இணைப்பும் அவர் பெயரில் கட்டி வருகிறார் என்றும் எனது பிரமாண வாக்குமூலத்திலும், எதிர்வழக்குரையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

8) 55/2D ல் மணி வீட்டின் செக்குபந்தி என்ன என்றால் மேற்கே வேடியப்பன் வீடு, வடக்கு மணி மற்றும் மூர்த்தியின் இடம், கிழக்கு என்னுடைய வீடு, தெற்கு செல்வம் என்பவரின் வீடு. 55/2Dல் வாதிக்கு இடம் இல்லை என்றால் சுமார் 10 செண்ட் இருக்கும். நான் பொய்யாக சொல்கிறேன் வாதிக்கு மேற்படி சொத்து பாத்தியமோ, உரிமையோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.55/2C ல் விஸ்தீரனம் மற்றும் செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. வாதி மாதன் சாட்சியம் அளித்தது பொய்வழக்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 04.02 PM.

"Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct."

Sd/-D.Saravanan.,B.A., B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)